# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1843/31 - 2014 ජනවාරි මස 02 වැනි බ්‍රහස්පතින්දා - 2014.01.02

*1843/31 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி.7/2001.*

***1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டம்***

*2012 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபை ஒழுங்குவிதிகளின் 4 (2) (ஆ) என்னும் ஒழுங்குவிதியின் கீழான ஒன்று திரட்டிய நிரலிற்கான பின்னைய திருத்தங்கள்*

2013, யூன் 11 ஆந் திகதிய 1814/14 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2012, மே 31 ஆந் திகதிய 1760/40 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2012 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபை ஒழுங்குவிதிகளின் 4 (2) (ஆ) என்னும் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட பெயர்குறிப்பிடப்பட்ட ஆட்கள் பற்றியதுமான ஒன்றுதிரட்டிய நிரலுக்கு 2013, நவெம்பர் 25 ஆந் திகதி செய்யப்பட்ட பின்னைய திருத்தங்கள் இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறானதாக இருத்தல் வேண்டும்.

எச். கே. ஜீ. ஹெந்தவித்தாரண, ஆர்டபிள்யூபி, விஎஸ்வி, யூஎஸ்பி,
மேஜர் ஜெனரல் (இளைப்பாறிய),
தகுதிவாய்ந்த அதிகாரி,
பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு.

கொழும்பு,
*2013, திசெம்பர் 26.*

**அட்டவணை**

சேர்க்கப்பட்டவை:

(அ) தலிபான்களுடன் தொடர்புடைய தனிநபர்கள்
வி. கி.

(ஆ) தலிபானுடன் தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் ஏனைய குழுக்கள் மற்றும் வணிக முயற்சிகள்
வி. கி.

(இ) அல்கொய்தாவுடன் தொடர்புடைய தனிநபர்கள்.

QI. A. 318.13 பெயர் : 1. முஹமது, 2. ஜமால், 3. ஏபீடி - அல் றஹீம் அஹமட், 4. அல்- ஹஷிவ்
பெயர் (மூல எழுத்து வடிவம்): محمد جمال عبدالرحيم أحمد الكاشف.

பதவியின் பெயர் : வி. கி; பதவி : வி. கி ; பிறந்த திகதி : (அ) 1 சனவரி 1964; (ஆ) 1 பெப்புருவரி 1964 ; பிறந்த இடம் : கெய்றோ எகிப்து ; பிரபலமான வேறு பெயர்கள் : (அ) முகமது ஜமால் அப்டோ அல்-ஹஷிவ், (ஆ) முகமது ஜமால் அப்டோ அல்- ஹஷெவ்,

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.



2- G 18803

(இ) முகமது ஜமால் அப்ட் - அல் றஹீம் அகமது அல்- ஹஷிவ் ; (ஈ) முகமது ஜமால் அப்ட் - அல் றஹீம் அல் - ஹஷிவ் ; (உ) முகமது ஜமால் அப்ட்டு (ஊ) முகமது ஜமால் ; பிரபல்யம் குறைந்த வேறு பெயர்கள் : (அ) முகமது ஜமால் அபு அகமது (நொம் டி குரே) (ஆ) அபு அகமது (நொம் டி குரே) ; (இ) அபு ஜமால் (நொம் டி குரே) ; (ஈ) முகமது ஜமால் அப்டு அகமது (உ) முகமது ஜமால் அப்டு அகமது (நொம் டி குரே) (ஊ) முகமது ஜமால் அப்டூ (நொம் டி குரே) (எ) முகமது ஜமால் அகமது அப்டு (நொம் டி குரே) (ஏ) றியாத் (நொம் டி குரே) தேசிய இனம்: எகிப்தியர் கடவுச் சீட்டு இல. : (அ) முகமது ஜமால் அப்டூ என்ற பெயரின் கீழ் எகிப்திய கடவுச்சீட்டு இல. 6487, 1986 சனவரி 30 இல் வழங்கப்பட்டது. (ஆ) முகமது ஜமால் அப்ட் அல் றஹீம் அகமது அல்- ஹஷிவ் என்ற பெயரின் கீழ் எகிப்திய கடவுச்சீட்டு 1993 இல் வழங்கப்பட்டது (இ) முகமது ஜமால் அப்ட் அல் றஹீம் அல்- ஹஷிவ் என்ற பெயரின் கீழ் யேமன் கடவுச் சீட்டு இல. 388181 வழங்கப்பட்டது. தேசிய அடையாள இல. : வி. கி. முகவரி : எகிப்து; பட்டியலிடப்பட்ட திகதி : 21, ஒற்றோபர் 2013 ; ஏனைய தகவல்கள் : 1980 களின் பிற்பகுதியில் குண்டுகள் தயாரிப்பது தொடர்பில் அல்கொய்தாவிடம் ஆப்கானிஸ்தானில் பயிற்சி பெற்றவர் (QE. A. 4.01) எகிப்திய இஸ்லாமிய ஜிகாத்தில் (QE. A. 3.01) முன்னாள் உயர்மட்ட இராணுவ கொமாண்டர். 2011 இலிருந்து முகமத் ஜமால் வலையமைப்பினையும் (எம்ஜேஎன்) (QE.M. 136.13) எகிப்திலும் லிபியாவிலும் பயங்கரவாதிகள் பயிற்சி முகாமினையும் நிறுவியவர் : அராபிய தீபகற்பத்தில் அல்குவைதாவின் ஆதரவுடன் முகமத் ஜமால் வலையமைப்பின் பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொண்டவர். (QE. A. 129.10) 2012, செத்தெம்பர் 11 இல் லிபியாவில் பென்காசியிலுள்ள ஐ. அமெரிக்க தூதரகத்தின் மீதான தாக்குதலுடன் தொடர்புபட்டவர் என அறிக்கையிடப்பட்டவர். 2012 இல் எகிப்திலுள்ள நாசர் நகர பயங்கரவாதப் பிரிவில் தலைவர். எய்மன் அல் - சவாகிரியுடனும் (QI. A. 6.01) அரேபிய தீபகற்பத்திலுள்ள அல்குவைதா மற்றும் இஸ்லாமிய மக்றெப்பிலுள்ள (QE. T. 14.01) அல்குவைதா அமைப்பில் தலைமைத்துவத்துடனும் தொடர்புகளைக் கொண்டிருந்தவர். 2000 ஆண்டிலிருந்து பல தடவைகள் எகிப்திய அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டவர். 2011 இல் விடுவிக்கப்பட்டாரெனினும் 2012, நவெம்பர் எகிப்திய அதிகாரிகளினால் மீண்டும் கைது செய்யப்பட்டார். 2013, செத்தெம்பரிலுள்ளவாறு விசாரணையினை எதிர்பார்த்து சிறையிலடைக்கப்பட்டுள்ளார் ; மனைவியின் பெயர்: சமா அலி - அல் தகபானி (யேமன் பிரசை).

(QI. L. 319.13) பெயர் : 1 : முகமது : 2 : லாபொவாஸ் 3 : வி. கி. 4 : வி. கி.
பெயர் (மூல எழுத்து வடிவம்) : **لحبوس محمد**
பதவிப் பெயர் : வி. கி. பதவி : வி. கி. பிறந்த திகதி : 1978 ; பிறந்த இடம் : மாலி ; பிரபலமான வேறு பெயர்கள் : (அ) முகமது எனாயுனி (ஆ) கசான் (இ) கூசாயின் ; பிரபல்யம் குறைந்த வேறு பெயர்கள் : வி. கி ; தேசிய இனம் : மாலியன் கடவுச்சீட்டு இல. வி. கி. தேசிய அடையாள இல. : வி. கி ; முகவரி : மாலி ; பட்டியலிடப்பட்ட திகதி : 24, ஒற்றோபர் 2013; ஏனைய தகவல் : போர் யூனிவிகேஷன் எட் லீ ஜிகாத் என அவ்றிக் த ஐ குவெஸ்ட் இயக்கத்தின் உறுப்பினர்.

(ஈ) அல்கொய்தாவுடன் தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் ஏனைய குழுக்கள் மற்றும் வணிக முயற்சிகள்.

(QE. M. 136. 13 பெயர் : முகமது ஜமால் வலையமைப்பு.

பெயர் (மூல எழுத்து வடிவம் ) : **جمال محمد شبكة**
பிரபலமான வேறு பெயர்கள் : (அ) முகமது ஜமால் குழு; (ஆ) ஜமால் வலையமைப்பு ; (இ) அபு அகமது குழு (ஈ) எகிப்திலுள்ள அல்- குவைதா; பிரபல்யம் குறைந்த வேறு பெயர்கள் : வி. கி. முகவரி : எகிப்திலிருந்து தொழிற்படுபவர், லிபியா மற்றும் மாலி ; பட்டியலிடப்பட்ட திகதி : 21 ஒற்றோபர் 2013 ; ஏனைய தகவல் : 2011 இல் முகமது ஜமால் அல் காசில் (QI. A. 318. 013) இனால் நிறுவப்பட்ட பயங்கரவாத மற்றும் துணைக் குழுவில் இருந்ததுடன் அல்- குவைதாவுடனும் (QE. A. 4.01) எய்மன் அல் சவாகிறியுடனும் (QI. A. 6.01) அராபிய தீபகற்பத்திலுள்ள அல்- குவைதா தலைமைத்துவத்துடனும் (QE. A. 129.10) இஸ்லாமிக் மக்றெப்பிலுள்ள அல் - குவைதா அமைப்புடனும் (QE. T. 14.01) தொடர்புகளைக் கொண்டிருந்தவர். அரேபிய தீபகற்பத்திலுள்ள அல் - குவைதாவின் நிதியினையும் ஆதரவினையும் பெற்றவர். எகிப்திலும் லிபியாவிலும் பல்வேறு பயங்கரவாத பயிற்சி முகாம்களை நடத்தியவர். ஆயுதங்களைக் கொள்வனவு செய்தல். பயிற்சிகளை நடத்துதல் மற்றும் எகிப்தில் சினாய்யில் பயிற்சி முகாம்களை நிறுவியதாக அறிவிக்கப்படுகிறது. 2013, செத்தெம்பரிலுள்ளவாறு தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களுக்கு பயிற்சியளித்தல், வெளிநாட்டுப் போராளிகளுக்கும் பயிற்சியளித்தல், எகிப்தில், லிபியாவில் மற்றும் வேறு ஏதேனும் இடங்களில் பயங்கரவாதத் தாக்குதல்களுக்குத் திட்டமிடுவதாக அறிவிக்கப்படுகிறது. முகமது ஜமால் வலையமைப்பின் உறுப்பினர்கள் 2012, செத்தெம்பர் 11 ஆந் திகதியன்று பென்காசி லிபியாவில் இடம்பெற்ற ஐக்கிய அமெரிக்க தூதுவராலயத் தாக்குதலில் ஈடுபட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**நீக்கப்பட்டவை** :

(அ) தலிபானுடன் தொடர்புடைய தனிநபர்கள்
வி. கி.

(ஆ) தலிபானுடன் தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் ஏனைய குழுக்கள் மற்றும் வணிக முயற்சிகள்
வி. கி.

(இ) அல்கொய்தாவுடன் தொடர்புடைய தனிநபர்கள்
வி. கி.

(ஈ) அல்கொய்தாவுடன் தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் ஏனைய குழுக்கள் மற்றும் வணிக முயற்சிகள்
வி. கி.

**திருத்தங்கள் :**

(அ) தலிபான்களுடன் தொடர்புடைய தனிநபர்கள்
வி. கி .

(ஆ) தலிபானுடன் தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் ஏனைய குழுக்கள் மற்றும் வணிக முயற்சிகள்
வி. கி .

(இ) அல்கொய்தாவுடன் தொடர்புடைய தனிநபர்கள்
வி. கி. .

(ஈ) அல்கொய்தாவுடன் தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் ஏனைய குழுக்கள் மற்றும் வணிக முயற்சிகள்
வி. கி.

*1- 469*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.